**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 15.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 10170/SCIC/2023

திரு.மு.தினேஷ் — மேல்முறையீட்டாளர்
எண்.18, சேணியர் வீதி
மணலூர்பேட்டை அஞ்சல்
திருக்கோவிலூர் தாலுக்கா
கள்ளக்குறிச்சி.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் … பொது அதிகார அமைப்பு
விழுப்புரம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 28/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அலுவலகம், மணலூர்பேட்டை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களின் பெயர் பட்டியல் மற்றும் உரிமம் எண். வழங்கவும்” என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 02/05/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை மாவட்டப் பதிவாளர் அலுவலகம், விழுப்புரம்-க்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 06/06/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 10170/SCIC/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 09/08/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்), விழுப்புரம் அவர்கள் மனுதாரருக்கு ந.க. எண்.4199/அ2.2024-17 நாள் 21/11/2024 வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும்

தெரிவித்துள்ளார். பின்னர், மனுதாரர் 26/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிப்பட்ட பிரதிநிதி திரு.சு.துரைசாமி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), மணலூர்பேட்டை சார்பதிவகம், அவர்கள் ஆஜராகி ஏற்கெனவே மனுதாரரின் 28/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு 27/04/2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்களை அனுப்பியதாகவும், மனுதாரரின் 02/05/203 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு 05/06/2023 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், மீண்டும் 21/11/2024 தேதியிட்டும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார். அதற்கு மனுதாரர், தான் 21/11/2024 தேதியிட்ட தகவல் மட்டுமே தனக்கு கிடைக்கப் பெற்றதாகவும், அத்தகவலில் இனம் 1 மற்றும் 7-க்கு வழங்கிய தகவல் மட்டுமே மனநிறைவாக உள்ளது என்றும் மற்ற இனங்களுக்கான தகவல் சரியானதாக இல்லை என்றார். பொதுத் தகவல் அலுவலரால் 21/11/2024 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய தகவலை ஆணையம் பரிசீலனை செய்கையில், இனங்கள் 2, 4 மற்றும் 6 ஆகியவற்றிற்கான தகவல்களும் ஆவணங்களின்படியான உரிய தகவல் என ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் இனம் 3-க்கு திருத்திய தகவலை மனுதாரருக்கு அளிக்க வேண்டும். இனம்-5-ஐ பொறுத்த வரையில், மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(J)-ன் கீழ் மணலூர்பேட்டை சார்பதிவகத்தில் பராமரிக்கப்படுகிற ஆவணங்களை ஆய்வு செய்ய அனுமதி கோரியுள்ளார். ஆனால், அதற்கு பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய பதிலில், மனுதாரர் எந்தெந்த ஆவணங்களை/பதிவேடுகளை ஆய்வு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு கோராததால், ஆய்வு செய்ய அனுமதி அளிக்க இயலாது எனத் தெரிவித்துள்ளார். அதனை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இன்றைய விசாரணையின் போது, அது குறித்து கேட்டதற்கு, மனுதாரர் மணலூர்பேட்டை கிராம ஆவணங்களை ஆய்வு செய்ய வேண்டுமென்றுத் தெரிவித்தார். எனவே, மனுதாரர் 25/04/2025 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு, மேற்குறிப்பிட்ட மணலூர்பேட்டை சார்பதிவகத்திற்கு செல்லுமாறும், அதற்கேற்றவாறு பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் ஆய்வு செய்யத் தேவையான சம்பந்தப்பட்ட கிராமத்தின் பதிவேடுகளை / ஆவணங்களை மட்டும் ஆய்வுக்கு உட்படுத்த உரிய வழி வகை செய்யும்படியும், அவ்வாறான ஆய்வினை மனுதாரர் முடித்த பின்னர், மனுதாரர் கோருகின்ற ஆவணங்களின் நகல்களை சான்றொப்பமிட்டு, எவ்வித கட்டணமும் இல்லாமல் இலவசமாக மனுதாரருக்கு வழங்கும்படியும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, அதன் பின்னர் 25/04/2025 தேதியன்றே, மனுதாரர் கோரிய இனம் 3-க்கான திருத்திய தகவலை பொதுத் தகவல் அலுவலர் நேரடியாக வழங்கிட வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. அதன் பின்னர், மனுதாரருக்கு வழங்கிய இனம்-3-க்கான திருத்திய தகவலின் நகல் மற்றும்**

நிறைவேற்றுகை அறிக்கையினை 30/04/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேலும், இனம்-4-க்கு, மனுதாரர், மணலூர்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களில் ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களால் ஆவணம் வரைவு செய்து பதிவு செய்யப்படும் ஆவணங்கள் தொடர்புடைய அனைத்து கோப்புகளையும் ஆய்வு செய்ய வேண்டுமென்று கோரியுள்ளார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், அளித்த தகவலில் ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களால் ஆவணம் வரைவு செய்து பதிவு செய்யப்படும் அனைத்து ஆவணங்களும் ஸ்கேன் செய்து, அதனை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவிடும் என்றும் வேறு எந்த கையேடோ, மேற்குறிப்பிட்ட விவரங்கள் அடங்கிய பதிவேடோ தமது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்றும் எனவே, மனுதாரர் கோரியவாறான ஆவணங்களை ஆய்வு செய்ய வேண்டுமென்ற கேள்வி எழவில்லை என்று தெரிவித்தார். இந்தத் தகவல் ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளின்படியான உரிய தகவலை அனுப்பியிருப்பதாகப் பதிவு செய்து ஆணையம் ஏற்கிறது.

இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், இணையதளத்தினுள் நுழைவதற்கு ஒரு பயனர் அடையாள எண் வழங்கப்படும், அவ்வாறான எண்ணைப் பயன்படுத்தி ஒருவர் மட்டுமே இணையதளத்திற்குள் சென்று, தேவையான ஆவணங்களை ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும், அந்த பயனர் அடையாள எண்ணை பயன்படுத்துபவர் அந்த கணினியில், அந்த சமயத்தில் ஆய்வு செய்ய மட்டும்தான் இயலும், வேறு எந்த அலுவலகப் பணியினையும் செய்வதற்கு அந்தக் கணினியை பயன்படுத்த இயலாது. இம்மாதிரியான சூழலில், வேறு எந்த மனுதாரரையும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ய அனுமதிக்க இயலாத சூழ்நிலை உள்ளது என்று தெரிவித்தார்.

எனவே, மேற்குறிப்பிட்ட நிலையினை கருத்தில் கொண்டும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்துகின்ற வகையில், மனுதாரர் ஆவணங்களை ஆய்வு செய்யும் அதே நேரத்தில், அலுவலகத்தின் பணி பாதிப்புக்குள்ளாகாமல் நடைபெறுவதற்கும் ஏதுவாக ஒரு நிலையான இயக்க முறையினை, பத்திரப் பதிவுத்துறை தலைவர், சென்னை அவர்கள் கண்டறியுமாறு ஆணையம் அறிவுறுத்துகிறது. இது குறித்த அறிவுரைகளை அனைத்து சார்பதிவாளர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

## <u>வழக்கு எண். SA 10170/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை -600 028,

2. பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
விழுப்புரம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.மு.தினேஷ்
எண்.18, சேணியர் வீதி
மணலூர்பேட்டை அஞ்சல்
திருக்கோவிலூர் தாலுக்கா
கள்ளக்குறிச்சி.

RG/PC